


Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 282

செவ்வாய்க்கிழமை
03 செப்ரெம்பர் 2024

ஆவணி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# ரணில், சஜித்தை இணைக்க முயற்சி

## திரைமறைவில் தீவிர நடவடிக்கை என அநுர தெரிவிப்பு

கொழும்பு, செப். 3
ஜனாதிபதித் தேர்தலில், ரணிலும் சஜித்தும் இணைந்துகொள்வது தொடர்பில் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். தேசிய மக்கள் சக்திக்கு (அநுரவுக்கு) கிடைத்துள்ள சாதகமான நிலையை மாற்றியமைப்பதற்காக, ஜனாதிபதியினதும் எதிர்கட்சித் தலைவரினதும் பரப்புரைப் பிரிவில் இரண் 11

# சமஷ்டித் திட்டம் எதுவும் இல்லை!

## சஜித் வெளிப்படை

யாழ்ப்பாணம், செப். 3
எனது தேர்தல் அறிக்கையில் சமஷ்டித் தீர்வு தொடர்பில் எதையும் உள்ளடக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். 11

## ஜனாதிபதித் தேர்தல் 2024

# அஞ்சல் வாக்களிப்பு நாளை ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 3
ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல்மூல வாக்களிப்பு நாளையதினம் ஆரம்பமாகவுள்ளது. நாளை செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி 11

# பாம்பு தீண்டி இளைஞர் சாவு

யாழ்ப்பாணம், செப். 3
பாம்பு தீண்டியதால் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். யோகேஸ்வரன் கேசவன் (வயது-32) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
தெல்லிப்பழை வறுத்தலை விளான் 11

# பொறுப்புக்கூறலுக்காக இலங்கைக்கு அழுத்தம்

## மனித உரிமைகள் பேரவை வலியுறுத்து

**கொழும்பு, செப்ரெம்பர் 3**
**ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு, இருக்கக்கூடிய அத்தனை சாத்தியப்பாடுகளையும் பரிசீலிக்குமாறு உறுப்பு நாடுகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கோரியுள்ளது.** 11

# ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க வேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 3
அரச பணியாளர்கள் எமது சமூகத்தில் மதிப்பு மிக்கவர்கள். அவர்கள் எடுக்கும் தீர்மானங்கள் மக்களிடத்தில் 11

# புலமைப்பரிசில் செப்ரெம்பர் 15

கொழும்பு, செப். 3
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெறும் என்று 11

ஒற்றையாட்சி வேட்பாளருக்கு ஆதரவு

# தந்தை செல்வாவின் சித்தாந்தத்தை தலைகீழாகப்புரட்டிப்போட்ட தமிழரசு

## மக்கள் பாடம் புகட்டுவர் என சிறீகாந்தா சாடல்

யாழ்ப்பாணம், செப். 3
ஒற்றையாட்சியைப் பின்பற்றும் தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்கியதன் மூலம் தந்தை செல்வாவின் சித்தாந்தத்தை தலைகீழாக புரட்டியுள்ளதாக தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் 11

# ஸ்ரீகணேசன் பேராசிரியராக பதவி உயர்வு

யாழ்ப்பாணம், செப். 3
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மூத்த விரிவுரையாளர் கே.ஸ்ரீகணேசன், பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இவரைப் பேராசிரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை கடந்த 11

# சஜித்தை ஆதரிக்கும் முடிவை ஒன்றிணைந்து நிறைவேற்றுவோம்

## மாவை குத்துக்கரணம்

யாழ்ப்பாணம், செப். 3
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக எடுத்த தீர்மானத்தைக் கொண்டு செல்லவேண்டிய பொறுப்பு தமிழரசுக் கட்சிக்கு இருக்கின்றது. அதை நாங்கள் நிறைவேற்றவேண்டும் எனத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா 11






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றம் கலைந்தால் இருமாதத்தில் பொதுத்தேர்தல்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

**கொழும்பு, செப்.3**

**எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்படுமாக இருந்தால் குறைந்தது இரு மாத காலப்பகுதிக்குள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி ஆகவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறுவதற்கு இன்னும் ஒருவருட காலம் எஞ்சியிருக்கின்றது. எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தால், கலைக்கும் தினத்திலிருந்து குறைந்த பட்சம் 66 நாள்களில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் என்றில்லை, எப்போது கலைத்தாலும் 66 நாள்களில் தேர்தல் நடத்தப்படும். -என்றார். (ச)

# தேர்தல் ஒத்திகை விசாரணை நடத்துக

### *ஜனாதிபதி வேட்பாளர் ரத்நாயக்க கோரிக்கை*

கொழும்பு, செப் 3



எம்பிலிப்பிட்டியவில் நடத்தப்பட்ட மினி தேர்தல் தொடர்பாக விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி வேட்பாளரும் பொதுச்சேவை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவருமான ஜனக ரத்நாயக்க தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட ஒரு காணொலியில் மூன்று வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டு அந்தப் பெட்டிகளுக்குள் வாக்குகள் போடப்படுகின்றன.

பின்னர் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. இனம் தெரியாத குழு ஒன்றே இதை செய்துள்ளது.

இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் கேட்டுள்ளார். (ச-25,6)



# இளைஞர்களுக்கு ஒரு இலட்சம் வேலை

## ரணில் உறுதியளிப்பு

கொழும்பு, செப்.3

அடுத்த வருடம் இளைஞர்களுக்கு ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதுடன் சுயதொழில் பெறுவதற்காக 50 பேருக்கு நிதி நிவாரணங்கள் வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி சரியான தீர்மானத்தை எடுத்து நாட்டை முன்னோக்கி நகர்த்தும் வேலைத் திட்டத்தை மக்கள் உறுதிப்படுத்தவேண்டும். அத்துடன், தென் கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு மருத்துவபீடம் அமைக்கப்படும். அம்பாறை மருத்துவமனை போதனா மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ச-இ)

# நாட்டைப் பாதுகாத்த படையினரைக் காப்போம்

### *வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவிப்பு*

கொழும்பு, செப்.3

30 வருட கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்திய இராணுவத்தினருக்கு எதிராக சர்வதேச அரங்கில் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் அனைத்தையும் நிராகரிக்கிறோம். இராணுவத்தினர் மீது சுமத்தப்படும் பொய்யான குற்றச்சாட்டுகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.

-இவ்வாறு சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 வருட கால போரை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்திய இராணுவத்தினர் நிம்மதியில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் நாட்டுக்காக உயிர் தியாகம் செய்ததால் தான் அரசியல்வாதிகள் இன்று சுதந்திரமாகப் பரப்புரை செய்கிறார்கள். இராணுவத்தினர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசியல் நோக்குடையது. இராணுவத்தினரின் உரிமைகளைப் பாதுகாக்க அனைத்து அரசியல் தரப்பினரும் பொறுப்புடன் செயற்படவேண்டும் - என்றார். (ச)

# 1, 745 முறைப்பாடுகள்

கொழும்பு, செப்.3

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஆயிரத்து 745 ஆக அதிகரித்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியிலேயே இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அதேநேரம் நேற்றுமுன்தினம் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 153 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச)

# அதிகாரப்பகிர்வுக்கு இடமில்லை படையினரைக் காட்டிக்கொடோம்!

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, செப்.3

ஆயிரக்கணக்கான படையினர் உயிர்த்தியாகம் செய்து பாதுகாத்த நாட்டை தேர்தல் வெற்றிக்காக காட்டிக்கொடுக்கமுடியாது. அத்துடன் எம்மால் அதிகாரங்களையும் பகிரமுடியாது.

-இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாக்குகளைப் பெறுவதற்காக தேர்தல் காலங்களில் போலி வாக்குறுதிகளை வழங்குவதால் மக்கள்பிரச்சினைதீரப்போவதில்லை. அதனால்தான் செய்யக்கூடிய விடயங்களை மட்டும் கூறிவருகின்றோம்.

அந்த அடிப்படையிலேயே எம்மால் அதிகாரங்களைப் பகிரமுடியாது எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன். 13 இல் பொலிஸ் அதிகாரத்தை வழங்கமுடியாது.



அத்துடன் ஆயிரக்கணக்கான படையினர் உயிர்த்தியாகம் செய்து வென்றெடுத்த சுதந்திரத்தை, நாட்டை தேர்தல் வெற்றிக்காகவும், வாக்கு வேட்டைக்காகவும் காட்டிக்கொடுக்க முடியாது வடக்கு இளைஞர்கள் வெளிப்படைத்தன்மையை வரவேற்கின்றனர் பொய் வாக்குறுதிகளை அவர்கள் விரும்புவதில்லை- என்றார். (ச-44)

# நல்லூர் முடிந்ததும் யாழில் பரப்புரை

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, செப்.3

நல்லூர்த் திருவிழா முடியும் வரை யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்கப்போவதில்லை என பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாங்கள் கலாசார விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

# சஜித்துக்கு ஆப்புவைத்த தலதா அத்துக்கோரள!

கொழும்பு, செப்.3

சஜித் அணியில் இருந்து வெளியேறிய நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தலதா அத்துக்கோரளவின் உரை ஒன்றினால் அந்த அணிக்குள் பல பிளவுகள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதனையடுத்து சஜித் தரப்பில் இருந்து ரணில் பக்கம் தாவ பலர் திட்டமிட்டுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் அதனைத் தடுக்கும் வகையில் சிறப்பு வேலைத்திட்டத்தை சஜித் ஆரம்பித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# 23 வேட்பாளர்கள் மாயம்

ஜனாதிபதித் தேர்தலில் முன்னிலையாகியுள்ள வேட்பாளர்களுள் 23 பேரின் தற்போதைய நிலை தொடர்பில் எந்தத் தகவலும் இல்லை என கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பொதுமக்களுக்கான கூட்டங்களை நடத்தி தேர்தல் வியாபாரங்களை நடத்திச் செல்வது சுமார் 15 வேட்பாளர்களால் மாத்திரமே மேற்கொள்ளப்படுகிறது.

அதேவேளை மாயமான வேட்பாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ள தொலைபேசி இலக்கங்கள் கூட போலியானவை எனத் தகவல் வெளியாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்களின் ஆயுதம் தமிழ்ப் பொதுவேட்பாளர்

*யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு*

**யாழ்ப்பாணம், செப்.3**

**தேர்தல் காலங்களில் தமிழ்த்தேசியம் பேசுகின்றோம் என்ற போர்வையில் செயற்பட்டு வரும் தமிழ்த்தேசியக் கட்சிகள் இந்தச் சந்தர்ப்பத்தில் சிந்தித்துச் செயற்பட வேண்டும். தமிழ்மக்களின் உரிமைகளை நிலைநாட்டக் கூடியவராக நிறுத்தப்பட்டுள்ள தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு உங்கள் ஆதரவை வழங்கவேண்டும்.**

-இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

தேர்தல் காலத்தில் தென்னிலங்கையால் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களையும், தனிப்பட்ட இருட்டுப் பேச்சுகளையும் நிறுத்தவேண்டும்.

போர்மௌனிக்கப்பட்ட பிறகு கடந்த 15 ஆண்டுகளாக இன்றுவரை தமிழ்மக்களுடைய வாக்குகளை அபகரித்துக் கொண்டு தென்னிலங்கை அரசாங்கத்தைப் பாதுகாக்கும் வகையில் தமிழ்க் கட்சிகள் காட்டுகின்ற அக்கறையை வாக்களித்த தமிழமக்களின் நலன்களிலும், தமிழ்மக்களின் உரிமைசார்ந்த விடயங்களிலும் காட்ட முன்வர வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் தங்கள் வாக்குகளை உரிமைசார்ந்து பயன்படுத்தவேண்டும் என்றும் பல்கலைக்கழக மாணவ சமுதாயமாக நாங்கள் வலியுறுத்துகின்றோம் என்றும் தெரிவித்துள்ளது. (ச-66)

## எம்.பி.களுக்கு துப்பாக்கி அவசியமில்லை

*முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜெயக்கொடி தெரிவிப்பு*

கொழும்பு, செப்.3

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு துப்பாக்கிகள் வழங்குவது தேவையற்ற செயல் என குற்றத்தடுப்பு பிரிவு முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கனவே பிஸ்டலும் ரிவால்வரும் வழங்கப்பட்டுள்ள நிலையில் துப்பாக்கிகள் எதற்கு? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். அவர்களின் பாதுகாப்புக்கென பொலிஸார் பணியிலமர்த்தப்பட்டுள்ளனர். அதனால்துப்பாக்கிகள் அவசியமில்லை. குழப்பமான சூழ்நிலைகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் துப்பாக்கிகள் தவறாக பயன்படுத்தப்படுவதற்கும் வாய்ப்புள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25-6)

## தேர்தல் பணிகள் படையினரும் களமிறக்கம்

கொழும்பு, செப்.3

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொலிஸாருடன் விசேட அதிரடிப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்கெண்ணும் நிலையங்களிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் இரண்டு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதை விட நடமாடும் பொலிஸ் பிரிவையும் உருவாக்கவுள்ளோம். வாக்கெண்ணும் நிலையங்களின் உள்ளே அனுமதி பெற்றவர்களைத்தவிர ஏனையோர் அனுமதிக்கப்பட மாட்டார்கள். வாக்கெண்ணும் பணி முடிவடையும் வரை வாக்கெண்ணும் நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

## கடத்தப்படவிருந்த ஐஸ் போதை மீட்பு

கொழும்பு, செப்.3

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 10.13 கிலோ ஐஸ் போதைப்பொருளை கடந்த சனிக்கிழமை சென்னை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதன் பெறுமதி 506.5 மில்லியன் இந்திய ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான போதைவஸ்து தொடர்பாளர் உட்பட ஆறு சந்தேகநபர்களை பொலிஸார் கைதுசெய்ததுடன் இந்தக் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 13 மில்லியன் இந்திய ரூபா பெறுமதியான மூன்று வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-6)

## கடற்படையிலிருந்து விலகுவோர் உயர்வு

கடற்படையை விட்டு வெளியேறிய அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஐந்து வருடங்களில் இலங்கை கடற்படையின் 167 அதிகாரிகளும் 10,002 மாலுமிகளும் சேவையை விட்டு வெளியேறியுள்ளனர் என தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. (ச-இ)

## ஆதிவாசிகள் உரிமை; அங்கீகரிக்க வேண்டும்

கொழும்பு, செப்.3

ஐ.நா. பரிந்துரைத்துள்ள ஆதிவாசிகளின் உரிமைகளை அரசமைப்புச் சட்டத்தினூடாக நடைமுறைப்படுத்துமாறு ஆதிவாசிகளின் தலைவர் உருவருகே வன்னிலா அத்தோ, ஆதிவாசிகளின் உரிமைகளுக்கான ஐ.நா.அமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினூடாக தமது பூர்வீக வேட்டை நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் தாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

1997 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாக்குமாறு ஆதிவாசிகளின் உரிமைகளுக்கான ஐ.நாவின் அமைப்பு இலங்கை அரசாங்கத்தைக் கோரியிருந்தது.

எனினும் 17 ஆண்டுகள் கடந்தும் இதுவரை ஆதிவாசிகளின் உரிமைகள் அரசமைப்பில் அங்கீகரிக்கப்படவில்லை. மாறி மாறி ஆட்சியமைக்கும் அரசாங்கங்கள் தொடர்ச்சியாக தம்மை ஏமாற்றி வருவதாகவும் உருவருகே வன்னிலா அத்தோ தெரிவித்துள்ளார். (ச-6)

## புதினம் தெரியுமோ?



**தா**ன் போகவே வழியில்லாத மூஞ்சூறு தன்னோட விளக்குமாத்தையும் கொண்டுபோக ஆசைப்பட்ட கதைமாதிரிப் போட்டுது உந்த வீட்டுக்கட்சியின்ர எலக்சன் சப்போர்ட் முடிவு. வீட்டுக்கட்சியே தொகுதிக்கு ஒரு பக்கமா சிதறிச் சின்னாபின்னமாகி, சீரழிஞ்சுபோய்க் கிடக்குது. ஒவ்வொரு எலக்சனிலையும் அவையின்ர வாக்குவங்கி 'ஸ்ட்ரோ' வைச்சு குடிக்கிற சோடா மாதிரி 'சர்ரெண்டு' வத்திக்கொண்டே போகுது. இது பத்தாது எண்டு உள்ளுக்க நடந்த பதவிப்பிடுங்குப்பாட்டால இப்ப கோர்ட்டிலையும் கட்சியை ஏத்தினதால, அந்தக் கட்சியின்ர பேர் சனத்திட்ட நாறிப்போய்க்கிடக்குது. இந்த லட்சணத்தில அவை தாங்கள் சொல்றபடிதான் சனம் கேக்கும் எண்டு நம்பிறதை மாதிரி கோமாளித்தனம் வேற ஒண்டுமில்லை.அதோட இந்தமுறை மத்திய குழுவின்ர முடிவு எண்டு சொல்லி வந்த அறிவிப்பு, 'கட்சியின்ர முடிவு இல்லை.' எண்டு அதே கட்சியின்ர தலைவர் ஒப்பாரி வைக்கிறார். கட்சியின்ர தலைவருக்கே தெரியாமல், அவரையே மதிக்காமல் 'மத்திய குழு சொல்லே மந்திரம்' எண்டு நடக்கிற அளவுக்கு வீட்டுக்கட்சியில ஜனநாயகம் கொடிகட்டிப் பறக்குதோ? எண்டும் சிலர் நினைக்கலாம். ஆனால் அப்பிடி ஒரு கோதாரியுமில்லை. எல்லாமே டீல் தான்.

ஏற்கனவே பட்சி சிங்கள அரசியல்வாதியளோட வீட்டுக்கட்சிக்காரர் சிலருக்கு டீல் முடிஞ்சுபோட்டுதெண்டு படிச்சுப் படிச்சுச் சொன்னதைத்தான் முந்தநாள் 'மத்திய குழுவின்ர தீர்மானம்' எண்டு ஒப்பேற்றியிருக்கினம். கூட்டத்தில ஆரெல்லாம் வந்தால் சிக்கலாகும் எண்டு பார்த்து, அவை வர ஏலாத நாளில அவசரமா கூட்டத்துக்கு அறிவிக்கேக்கையே ஏதோ 'சுத்துமாத்து' நடக்கப் போகுது எண்டு கட்சிக்காரருக்கு விளங்கிட்டுது. மத்திய குழுக்கூட்டத்துக்கு அறிவிக்கிறதெண்டால் ஏழு நாள் அவகாசம் குடுக்க வேணும். ஆனால் அஞ்சு நாள் அவகாசத்தோட, கட்சியின்ர யாப்பை குப்பைத் தொட்டிக்குள்ள போட்டிட்டு மத்தியகுழுக் கூட்டத்தைக் கூட்ட அப்பிடி என்ன தலைபோற அவசரம்? கேட்டால் 'தபால் மூல வாக்களிப்புக்கு முதல் முடிவெடுக்கோணும். எங்கட முடிவை சனம் பார்த்துக்கொண்டிருக்கு' எண்டு உருட்டல் வேற. தபால் மூல வாக்களிப்புக்கு நாள் நெருங்கிட்டுது எண்டு இவைக்கு இப்பவோ தெரியும். ஏற்கனவே ரண்டுதரம் சும்மா இழுப்பாணி சப்பாணியா மத்தியகுழுவைக் கூட்டேக்க ஒரு ஒழுங்கான முடிவை எல்லாரும் இருக்கேக்க எடுத்திருக்கலாமே.

அதுக்கும் ஒரு உருட்டு வைச்சிருக்கினம். 'மூண்டு வேட்பாளர்மாரின்ர தேர்தல் விஞ்ஞாபனத்தையும் பார்த்துத்தான் முடிவெடுத்தம்' எண்டுறதுதான் அந்தச் சீலம்பாய் உருட்டு. 'எந்த வேட்பாளர் சமஷ்டிக்கு ஓமெண்டுறாரோ, ஆர் அதை பப்ளிக்கா தேர்தல் விஞ்ஞாபனத்தில அறிவிக்கிறாரோ அவருக்குத்தான் சப்போர்ட் பண்றது' எண்டதுதான் முதல் நடந்த ரண்டு கூட்டத்திலையும் சொல்லுப்பட்டது. ஆனால் கட்சி இப்ப எடுத்த முடிவு அப்பிடி எடுபடேலை. ஏனெண்டால் வீட்டுக்கட்சி ஆருக்கு சப்போர்ட் எண்டு சொல்லுதோ அவர் கூட சமஷ்டியைப் பற்றி தொட்டும் பாக்கேலை. ரெலிபோன் காரருக்கு சப்போர்ட் எண்ட முடிவை ஏன் எடுத்தவை ? எதுக்கு எடுத்தவை? அதில தமிழ் மக்களுக்கு என்ன லாபம்? எண்டெல்லாம் வீட்டுக்கட்சி சொல்லவேயில்லை. 'இதுதான் எங்கட முடிவு. அந்த முடிவை ஏன் எதுக்கெண்டு கேக்காமல் நீங்கள் வோட் பண்ண வேணும்' எண்ட சட்டாம்பித்தனத்தோட தான் இந்த முடிவை எடுத்திருக்கினம். உந்தத் தீர்மானத்தை கூட்டத்துக்கு வந்து எடுத்தவையோ? முதலே ஒராள் முடிவு செய்துபோட்டு அதை மத்திய குழுவின்ர தீர்மானமா மாத்தினவையோ? எண்டதையெல்லாம் நாளைக்கு பாப்பம்.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அலங்காரக்கந்தன் தீர்த்தோற்சவம்

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். நல்லையம்பதி அலங்காரக் கந்தன் ஆலய வருடாந்த திருவிழாவின் தீர்த்தோற்சவத் திருவிழா ஆலய தீர்த்தக்கேணி யில் நேற்று பக்தர்கள் புடைசூழ பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

தொடர்ந்து வள்ளி, தெய்வானை உள்ளிட்ட பரிவாரத் தெய்வங்கள் சகிதமாக வெளிவீதி உலாவந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (ச-25, 27 ,100,66)

## வல்லிபுர மாயவனுக்கு கொடியேற்றம்



வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவத் திருவிழா, ஆலயப் பிரதம சிவாச்சாரியார் கண்ணன் குருக்கள் தலைமையில் நேற்றுத்திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து பதினெட்டு நாள்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சமுத்திரத் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை கேணித்தீர்த்தமும் இடம்பெறவுள்ளன. (ச-25,27)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** முன்னோர் வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள். முயற்சிகளில் கவனம் தேவைப்படும். நினைப்பதை சாதிக்கும் நாள். அலுவலகத்தில் இருந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். நெருக்கடிக்கு ஆளாகும் நாள்.

**இடபம்:** கவனமாக செயற்பட வேண்டிய நாள். உங்கள் முயற்சிக்கு சூழ்நிலைகள் சாதகமாகும். யோகமான நாள். வியாபாரத்தில் உங்களுக்கு தொல்லை கொடுத்தவர்கள் விலகிச்செல்வர். தடைகளைத் தாண்டி வெற்றிபெறும் நாள்.

**மிதுனம்:** அனுசரித்துச் சென்று ஆதாயம் காண வேண்டிய நாள். துணிச்சலுடன் செயற்படுவீர். முயற்சியால் முன்னேற்றம் காணும் நாள். இழுபறியாக இருந்த வழக்கு சாதகமாகும். நிதானமாக செயற்பட வேண்டிய நாள்.

**கடகம்:** உங்கள் முயற்சியில் இழுபறி ஏற்பட்டாலும் எதிர்பார்த்ததை அடைவீர். தடைப்பட்டிருந்த வருவாய் வரும். நன்மையான நாள். பணவரவில் இருந்த தடைகள் விலகும். செயலில் ஆதாயம் அதிகரிக்கும். ஆதாயமான நாள்.

**சிம்மம்:** தடைகளை சந்திக்கும் நாள். உங்கள் செயல்களில் குழப்பம் தோன்றும். வீண் பிரச்சினைகள் உண்டாகும். முயற்சியால் முன்னேற்றம் காணும் நாள். அலுவலகத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் விலகும். உங்கள் வேலைகளில் தடுமாற்றத்தை சந்திப்பீர்.

**கன்னி:** எச்சரிக்கையாக செயற்பட வேண்டிய நாள். உங்கள் வேலைகளில் தடைகளும் தாமதமும் ஏற்படும். நன்மையான நாள். உழைப்பிற்கேற்ற வருமானம் உண்டாகும். முயற்சியில் ஏற்பட்ட தடைகள் விலகும்.

**துலாம்:** நெருக்கடிகள் நீங்கும் நாள். உற்சாகத்துடன் செயற்படுவீர். தடைகள் விலகும். நன்மையான நாள். பழைய பிரச்சினைகள் முடிவுக்கு வரும். நீங்கள் எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள்.

**விருச்சிகம் :** முன்னேற்றமான நாள். பணியிடத்தில் பொறுப்பு அதிகரிக்கும். உங்கள் செல்வாக்கு உயரும். போட்டிகளை சமாளித்து வியாபாரத்தை விரிவு செய்வீர். வருவாயில் இருந்த தடைகள் விலகும்.

**தனுசு:** விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். வியாபாரத்தில் இருந்த நெருக்கடி விலகும். முன்னேற்றமான நாள். பணியிடத்தில் ஏற்பட்ட நெருக்கடி விலகும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும்.

**மகரம்:** விழிப்புடன் செயற்படவேண்டிய நாள். மனதில் குழப்பம் அதிகரிக்கும். முன்னோர் வழிபாட்டால் முன்னேற்றம் காணும் நாள். பணவரவில் ஏற்பட்ட தடைகள் விலகும். சங்கடம் உண்டாகும்.

**கும்பம்:** நிதானமாகச் செயற்பட வேண்டிய நாள். வியாபாரத்தில் உங்கள் எதிர்பார்ப்பு தள்ளிப் போகும். நினைப்பது நிறைவேறும் நாள். வியாபாரத்தில் போட்டியாளராக இருந்தவர்கள் விலகிச்செல்வர்.

**மீனம்:** ஆதாயம் காணும் நாள். உடல்நிலையில் ஏற்பட்ட பாதிப்பு நீங்கும். செல்வாக்கு உயரும் நாள். இழுபறியாக இருந்த பிரச்சினை முடிவுக்கு வரும். சங்கடங்கள் விலகும். நட்புகளால் உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

## தொழிற்சந்தை

கிளிநொச்சி, செப்.3

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம், மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருக்கின்ற மற்றும் தொழில் வழிகாட்டல் தேவைப்படுகின்ற இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு பயனடைய முடியும் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-25,13)

## நல்லூர்த்திருவிழாவின் 26 ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.3

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் நிகழ்வுகள் வரிசையில் 26 ஆம் நாள் நிகழ்வுகள், கொழும்புத்துறை இலந்தைக்குளம் பிள்ளையார் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. சங்கர ராஜராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இதன்போது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அறநெறிப் பாடசாலை, அத்தியடி சிதம்பர நடராஜர் வீரகத்திப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், அருள். விக்னேஸ்வரனின் "நல்லைக்கந்தன் கானாமிர்தம்" மற்றும் யாழ். பல்கலைக்கழக நடனத்துறை போதனாசிரியர் இ. தனராஜ் இன் பரதநாட்டிய நிகழ்வு போன்றவை இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன் சிறப்பு அதிதியாக யாழ். போதனா மருத்துவமனை மருத்துவ நிபுணர் மருத்துவர் த. பேரானந்தராஜா, கௌரவ அதிதியாக உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய ஆசிரியர் முதுகலைமாணி ச. நவநீதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைத்துள்ளனர். (ச-25)



வடமராட்சி கிழக்கு குடத்தனை வடக்கு அன்னை வேளாங்கன்னி ஆலய வருடாந்தப் பெருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ச-25,100)

## புதிய மாணவர் உள்வாங்கல்

யாழ்ப்பாணம், செப்.3

டவர் மண்டப அரங்க மன்றத்தின் டவர் தமிழ் நாடகப் பாடசாலைக்குப் புதிய மாணவர்களை உள்வாங்கும் ஆரம்ப நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் சண்டிலிப்பாய்க் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (ச-66)



பருத்தித்துறை அஞ்சல் சமூகத்தினரின் ஏற்பாட்டில் பருத்தித்துறை அஞ்சலகத்தில் அஞ்சலதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற அ.அருளானந்தசோதிக்கு மணி விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஏன்...? எதற்காக...?

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் தமிழரசுக்கட்சிக்குள் கடந்த சில வாரங்களாகவே இடியப்பச் சிக்கல்நிலை நீடித்து வந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்று தீர்மானித்திருக்கின்றது தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு. தமிழர் தரப்பு பொதுவேட்பாளரையே தமிழரசுக் கட்சி ஆதரிக்கவேண்டும் எனக் கட்சியின் கிளிநொச்சி மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் கட்டமைப்புகள் தீர்மானங்களை நிறைவேற்றி, மேலிடங்களுக்கு வலியுறுத்தியிருந்த நிலையிலேயே, அந்த அழுத்தங்களுக்கு அப்பாற்பட்டு, ஐக்கியமக்கள்சக்தி ஐக்கியமக்கள்கூட்டணியின்பெரும்பான்மையின வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்று தீர்மானித்திருக்கின்றது மத்திய செயற்குழு.

தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்று தீர்மானித்தமையொன்றும் அவ்வளவு பெரிய ஆச்சரியத்துக்குரிய விடயம் அல்ல. ஏனெனில், போர் முடிவடைந்த மறுவருடமே பொன்சேகாவுக்கு வாக்களித்தவர்கள் தமிழர்கள். மைத்திரிக்காக 'அன்னம் விடு தூதுகளை' அமுல்படுத்தியதும் நாங்களே. இவ்வளவு ஏன், இதே சஜித் பிரேமதாஸவை கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதும் தமிழர் தாயகம் வலுவாக ஆதரித்திருந்தது. ஆனால், இவ்வருடத்தின் ஜனாதிபதித் தேர்தல் வித்தியாசமானது. கடந்த தேர்தல்களில் இலங்கையின் அதியுச்ச அதிகாரத்தைத் தேர்ந்தெடுப்பதே தமிழர்கள் முன்பாக இருந்த ஒரே தெரிவாக இருந்தது. ஆனால், இம்முறை, 'தமிழர்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவில்லை. ஆதலால், சிங்களத் தலைவர்களுக்கான கூட்டான எதிர்ப்பு' என்ற தோரணைப்பட 'தமிழ்ப் பொதுவேட்பாளர்' ஒருவர் களமிறக்கப்பட்டுள்ளார். அதையெல்லாம் தாண்டித்தான் சஜித்தை ஆதரிக்கும் முடிவை அறிவித்திருக்கின்றது தமிழரசு.

ஆனால், சஜித்தை ஆதரிப்பதற்கு தமிழரசு மேற்கொண்ட பயணமும், செயற்படுத்திய விட்டுக்கொடுப்புகளும் அடிக்கோடுகள் காட்டப்படுவதற்கு ஏற்றவையே. ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது? என்பதற்காக தமிழரசு தன் மத்திய குழுக்கூட்டத்தை முதன்முதலில் கூட்டியபோது, ஒஸ்லோ உடன்படிக்கையை எவர் ஏற்கின்றனரோ அவருக்கே ஆதரவு என்று அறிவித்திருந்தது. பின்னர் அந்த வலியுறுத்தல் சுயாட்சியாகக் குறைந்தது. பின்னர் 13ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்துவேன் என்று தெரிவித்த சஜித்துக்கு ஆதரவு வழங்கியிருக்கின்றது. அப்படியென்றால் இந்தத் திடீர் மாற்றத்துக்கு என்ன காரணம்?

சில வேளைகளில், தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு அப்பாற்பட்ட புரிந்துணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு இந்த ஆதரவு அறிவிக்கப்பட்டிருக்கலாம். அவ்வாறான புரிந்துணர்வுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தால் - அதுகுறித்த பிடிமானங்களை எழுத்துமூலமாக தமிழரசு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அவற்றை பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தினால், தமிழரசு சஜித்தை எதற்காக ஆதரிக்கின்றது? என்ற குழப்பங்களில் இருந்து மக்களுக்கு விடிவு கிட்டும். அத்துடன், பொதுவேட்பாளர் விடயத்தை முன்னிறுத்தும் தரப்புகள் குறைந்தபட்சம் இரண்டாம்பட்சத் தெரிவாகவேனும் சஜித்தை முன்னிலைப்படுத்தக்கூடும். எல்லாவற்றுக்கும் மேல், தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டுள்ள நிலையில் - அதுவும் தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவரே பொதுவேட்பாளராகச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் பின்னணியில், அதையெல்லாம் தாண்டி சஜித்தை ஆதரித்த தீர்மானத்துக்கான காரணத்தை, ஏன்? எதற்காக? என்ற கேள்விகளின் பாற்பட்டு சஜித்துக்கு தமிழரசு மிகத்துல்லியமாக புரியவைக்க வேண்டும். ஏனெனில், இந்த ஆதரவுக்காக தமிழரசு தற்போது தன்னையே அடமானம் வைத்திருக்கின்றது.

இவையெல்லாம் ஒருபுறம் இருக்கையில், தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்கியிருக்கும் தரப்புகளிடமும், தமிழரசுக் கட்சியிடமும் கேட்கவேண்டிய இரு கேள்விகள் இருக்கின்றன. தமிழர்களுக்குத் தம்மைத்தாமே ஆள்கின்ற அதிகாரம் வழங்கப்படவேண்டும் என பல தசாப்தங்களாக வலியுறுத்திவந்த இலங்கையின் ஆகச்சிறந்த இடதுசாரித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழர் தாயகத்தில் அரசியல் அநாதையாக்கப்பட்டாரே அது ஏன்...? தமிழர்களுக்கு சுயாட்சிக்கும் மேற்பட்ட அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தும் நுவான் போபகே, சிறிதுங்க ஜயசூரிய போன்ற சிங்களத் தலைவர்கள் இம்முறையும் தேர்தலில் போட்டியிடுகின்றனர். எனில், எதற்காக அவர்களை முன்னிலைப்படுத்தவில்லை...?




# வாக்காளர் அட்டைகள்; இன்றுமுதல் விநியோகம்

**கொழும்பு, செப்.3**

**நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணி இன்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகும் என பிரதி தபால்மா அதிபர் நாயகம் ரஜிதா ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

வாக்காளர் அட்டைகள் தபால் திணைக்களத்திடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளன.
அஞ்சல் திணைக்களத்தினால் உரிய வகையில் குறித்த வாக்காளர் அட்டைகள் வீடுகளுக்கு விநியோகிக்கப்படும்.
அதேவேளை தபால் மூல வாக்களிப்பு நாளை தொடக்கம் எதிர்வரும் வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது. இந்த நாள்களில் தபால் மூல வாக்குகளை வழங்க முடியாதவர்கள் எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் வழங்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-6)

# மின்சாரசபை ஊழியர் சம்பளம் அதிகரிப்பு!

இலங்கை மின்சாரசபை ஊழியர்களின் சம்பளம் 25 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது. இதற்கான அமைச்சரவைப்பத்திரம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பள அதிகரிப்புக்கென அரசாங்கம் 750 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. தற்போது இலங்கை மின்சாரசபை ஊழியர்களின் சம்பளத்துக்கென மாதாந்தம் 3 பில்லியன் ஒதுக்கப்படுகின்றது. இந்த சம்பள அதிகரிப்பை விட அரசாங்கம் மின்சாரசபை ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளது. அதேவேளை இந்த சம்பள அதிகரிப்பு தேர்தலை மையப்படுத்திய அறிவிப்புகள் எனவும் தேர்தல் விதிமீறல் எனவும் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. (ச-6)

*10 வருட காலத்தில்*

# மின்சாரசபைக்கு 412.1 பில். இழப்பு

கொழும்பு, செப்.3

2013 - 23 காலப்பகுதியில் மின்சாரசபைக்கு 412.1 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக மின் சாரசபை பிரதிப் பொது முகாமை யாளர் நரேந்திர டீ சில்வா பொதுச்சேவை ஆணைக் குழுவுக்குத் தெரிவித்துள்ளார். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தவேண்டிய தொகை ஆயிரத்து 229 மில்லியன் ரூபாவும், சுயாதீன கடனாக 16 ஆயிரத்து 547 மில்லியன் ரூபாவும், மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி நிறுவனங்களுக்கு செலுத்தவேண்டிய தொகை 9 ஆயிரத்து 85 மில்லியன் ரூபாவாகவும், மக்கள் வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் 51 ஆயிரத்து 906 மில்லியன் ரூபாவாகவும் திறைசேரியிடமிருந்து பெற்ற கடன் 63 ஆயிரத்து 673மில்லியன் ரூபாவாகவும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் பெற்ற கடன் 100.445 மில்லியன் உள்ளதெனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-6)

# பஸ், ஓட்டோ கட்டணத்தில் மாற்றமில்லை

கொழும்பு, செப்.3

எரிபொருள் விலை குறைக்கப்பட்டாலும், இந்தஆண்டுபேருந்து கட்டணத்தில் மாற்றம் இருக்காது என பேருந்து தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.
பல வருடங்களாக விலைச்சூத்திரத்தின் கீழ் இயங்கி வருகிறது. விலைச்சூத்திரத்தின் படி 10 ரூபாய் மாற்றம் 4 சதவீதத்தை எட்டவில்லை. அதற்கமைய இம்முறை பஸ் கட்டணம் திருத்தப்படாது என்று சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.
அதேவேளை எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்பட்டாலும் ஓட்டோக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது என ஓட்டோச் சங்கங்கள் தெரிவித்துள்ளன. (ச)

**நாளை**

04.09.2024

புதன்கிழமை - ஆவணி - 19

சுபநேரம் : 04.35 - 06.05

ராகுகாலம் : 12.05 - 01.35

**நாளொரு நல்வார்த்தை**

**உலக வரலாற்றை படிப்பதை விட உலகில் வரலாறு படைப்பதே இனிமை.**

- ஜவகர்லால் நேரு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 102 ஆவது சர்வதேச கூட்டுறவு விழா

யாழ்ப்பாணம், செப்.3
யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபையின்
ஏற்பாட்டில் 102 ஆவது சர்வதேச
கூட்டுறவுதினவிழா யாழ்.மாவட்ட
கூட்டுறவுச்சபைத் தலைவர் க.மகா
தேவன் தலைமையில் யாழ். வீர
சிங்கம் மண்டபத்தில் கடந்த புதன்
கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக
இலங்கை தேசிய கூட்டுறவுச்சபை
பணிப்பாளர் ஜி.டி. சரத்வீரசிறி,
சிறப்பு விருந்தினராக கூட்டுறவு
அபிவிருத்தி ஆணையாளரும்;
கூட்டுறவுச் சங்கங்களின் தலை
வருமான லிங்கநாதன், கௌரவ
விருந்தினராக கூட்டுறவு அபிவி
ருத்தி உதவி ஆணையாளர் கி.
சந்திரசேகரன் ஆகியோர் கலந்து
கொண்டனர். (ச-25,17,27, 20)



ஜனாதிபதித் தேர்தலை முன்
னிட்டு, முல்லைத்தீவு மாவட்ட
தேர்தல் காரியாலயத்தினால்
சிரேஷ்ட தலைமைதாங்கும்
அலுவலர்களுக்கான கலந்து
ரையாடல் மாவட்ட தெரிவத்
தாட்சி அலுவலரும், மாவட்ட
செயலருமான அ.உமாமகேஸ்
வரன் தலைமையில் மாவட்ட
செயலக பண்டாரவன்னியன்
மாநாட்டு மண்டபத்தில் கடந்த
புதன்கிழமை நடைபெற்றது.
(ச-25-13)



உரும்பிராய் கிழக்கு அருள்மிகு
ஸ்ரீ மனோன்மணி அம்பாள்
சமேத சிவ மகேஸ்வரர் ஆலய
தேர்த் திருவிழா கடந்த வெள்
ளிக் கிழமை சிறப்புற நடைபெற்
றது. (ச)



# மாதாந்தச் சந்தை

யாழ்ப்பாணம், செப்.3
வடக்கு மாகாணத் தொழிற்றுறைத் திணைக்
களமும் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி
அபிவிருத்திப்பிரிவும் இணைந்து ஏற்பாடு
செய்த ஓகஸ்ட் மாதத்துக்கான மாதாந்தச்
சந்தை நிகழ்வு உடுவில் பிரதேச செயலக
வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்
றது. (ச-45-66)



ஹோலியன் போ இன்சிசிவ் இம்பெக்ட்
அமைப்பின் ஏற்பாட்டில், நாடாளுமன்ற உறுப்
பினர், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் இளை
யோருக்கிடையே கேள்வி - பதில் நிகழ்வொன்று
யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில்
கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம்
சிறீதரன், அங்கஜன் இராமநாதன், செல்வ
ராஜா கஜேந்திரன், எதிர்க்கட்சித் தலைவரின்
பிரதிநிதி உமாச்சந்திரா பிரகாஷ், வடக்கு
மாகாணசபை முன்னாள் அமைச்சர் அனந்தி
சசிதரன் உள்ளிட்டோருடன் இளைஞர், யுவதி
களும் கலந்துகொண்டனர். (ச-25, 27)





# மழைநீர் சேகரிப்பு விவாதப்போட்டி!

மன்னார், செப்.3
இலங்கை மழைநீர் சேகரிப்பு அமை
யத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாண
வர்களுக்கு இடையிலான விவாதப்
போட்டியின் இறுதி நிகழ்வு மன்னார்
மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில்
கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.
இதில் பரிகாரி கண்டல் அ.த.க.பாட
சாலை முதலாம் இடத்தையும்,கட்டை
யடம்பன் றோ.க.த.க.பாடசாலை இரண்
டாம் இடத்தையும், தலைமன்னார்
அ.த.க.பாடசாலை மூன்றாம் இடத்தை
யும் பெற்றுக்கொண்டன. (ச-25-56)



முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவியொ
ருவரின் சிறந்த விளையாட்டு திறமையை ஊக்குவிக்கும் வகையில்
கனடாவில் வாழ்கின்ற குமுழமுனையை சேர்ந்த யோகா பத்மநா
தனால் விளையாட்டுக்கான காலணி மற்றும் சீருடைகளையும்
வழங்கிவைக்கப்பட்டுள்ளது. (ச-13)




# வவுனியா பூம்புகார் மாணவர்கள் சாதனை

வவுனியா, செப்.3
வடமாகாண வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகளில் வவுனியா வடக்கு வலய பின்தங்கிய
பாடசாலைகளில் ஒன்றான பூம்புகார் கண்ணகி வித்தியாலய மாணவர்கள் சாதனை படைத்
துள்ளனர். க.சகிந்தன் 18 வயதுப் பிரிவில் 800 மீற்றர் ஓட்டத்தில் தங்கப்பதக்கமும், 1500
மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கமும், பா.விழிவண்ணன் 800 மீற்றர், 1500 மீற்றர், 3000
மீற்றர் போட்டிகளில் 3 வெண்கலப்பதக்கங்களைப் பெற்றுள்ளதுடன், அரைமரதன் போட்டி
யிலும் 3 ஆம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (ச-25-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலம்பெயரிகளின் டொலரில்தான் இலங்கையே மூச்சு விடுகின்றது!

## அவர்களை அச்சுறுத்துவதா? கேள்வி எழுப்புகிறார் அநுர

கொழும்பு. செப். 3

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் அனுப்பும் டொலரில் உயிர் வாழ்ந்து, நாட்டில் எதிர்நோக்கிய தீர்மானகரமான பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வுகண்டு அவர்களுக்கே அச்சுறுத்தல் விடுக்கும் இவர்கள் மனிதர்களா? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க.

வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களுக்கான வேலைத்திட்ட வெளியீடு, ஸ்ரீ ஜயவர்த்தனபுரவிலுள்ள தனியார் ஹோட்டல் வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு வினவியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நீங்கள் வெளிநாடு செல்வது உங்களது அரசியல் உரிமையை கைவிடுவதாக அமையுமா? இப்பொழுது வெளிநாடு சென்றுள்ளவர்களின் அரசியல் உரிமையை ஏளனம் செய்கிறார்கள். அவர்கள் இங்கே வந்து வாக்களிக்க முடியாது. அப்படியில்லாவிட்டால் அவர்கள் அங்கேயே இருக்கவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித ஒரு விடயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் அனைவருமே இங்கே வாழ விரும்பியவர்கள். ராஜித போன்றவர்கள் இந்த நாட்டை ஆட்சி செய்துதான் அவர்களை வெளிநாடு செல்லும் நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளார்கள். இப்பொழுது அச்சுறுத்தல் விடுக்கிறார்கள். இங்கு வாக்களிக்க வந்தால் இங்கேயே தங்கிவிடவேண்டுமென்று. பெரும்பாலானவர்கள் இந்த நாட்டில் வாழ விரும்புகிறார்கள். விஜயமுனி த சொய்சாவும் அவ்வாறு பரிகாசம் செய்தார். அவர்கள் உலகில் எங்கே இருந்தாலும் அவர்களின் அரசியல் உரிமைக்கு மதிப்பளித்து அதனை பாதுகாக்கின்ற இயக்கமே தேசிய மக்கள் சக்தியாகும். தான் வசிக்கின்ற இடத்துக்காக ஒருவர் தனது அரசியல் உரிமையைக் கைவிட வேண்டியதில்லை. அவர்கள் இருக்கின்ற நாட்டிலே இருந்துகொண்டே வாக்களிப்பதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுக்க தேசிய மக்கள் சக்தி கருதுகிறது. எனவே அது பற்றிய எங்கள் முன்மொழிவுகளை நாங்கள் தயாரித்துள்ளோம்.

வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களான நீங்கள் ஈட்டித்தந்த பணத்தால் தான் இலங்கை இந்தளவுக்காவது தாக்குப்பிடித்திருக்கிறது. இலங்கையில் ஒரு தனியான அலகு என்ற வகையில் மிக அதிகமான டொலரை ஈட்டித்தருபவர்கள் வெளிநாடுகளில் தொழில் செய்பவர்களே.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைய முன்னர் 6.8 பில்லியன் டொலர் கிடைத்தது. தேயிலையிலிருந்து ஏறக்குறைய 1.2 பில்லியன் டொலரே கிடைக்கின்றது. சுற்றுலா தொழிற்றுறையில் உச்சளவில் 4.2 பில்லியன் டொலரே கிடைத்துள்ளது. ஆடைத் தொழிற்துறையிலிருந்து 5 பில்லியன் டொலரே கிடைத்துள்ளது. ஆனால் ஆடைத் தொழிற்றுறைக்கு நாங்கள் மூலப்பொருட்களுக்கு கணிசமான தொகையைச் செலவிட வேண்டும். சுற்றுலாத் துறைக்காக வழங்குகின்ற சேவைகளுக்காக பணத்தைச் செலவிடவேண்டும். ஆனால் 6.8 பில்லியன் டொலர் தேறிய வருமானம் வெளிநாட்டு உழைப்பாளிகளிடமிருந்து கிடைத்துள்ளது.

எனவே இன்றும் இந்த நாடு இயங்கிக் கொண்டிருப்பது வெளிநாடு சென்றுள்ளவர்கள் அனுப்பி வைக்கின்ற பணத்தைக் கொண்டுதான் என்பதை குறிப்பிடவேண்டும். அந்த டொலர்களில் உயிர்வாழ்ந்து, நாட்டில் எதிர்நோக்கிய தீர்மானகரமான பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வுகண்டு அவர்களுக்கே அச்சுறுத்தல் விடுப்பதானால் இவர்கள் மனிதர்களா? உங்களின் சேவைக்கு நன்றி. மதிப்பளிக்கிறோம். நீங்கள் அனுப்பி வைக்கின்ற டொலரின் பலத்தினால்தான் இந்த நாடு நிலைத்திருக்கிறது" - என்றார். (அ-ஒ-இ)


## முல்லைத்தீவு தெற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)
## செம்மலை, அளம்பில், முல்லைத்தீவு.

எமது சங்கத்தில் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கீழ் குறிப்பிடப்படும் விபரப்படி வெளிவாரியாக கோரப்படுகின்றது. தகைமையுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 18/09/2024ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை எழுத்து மூலமாக "தலைவர்,முல்லைத்தீவு தெற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம், செம்மலை, அளம்பில்." என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

| பதவி | வெற்றிடங்கள் | சம்பள குறியீட்டு இல | சம்பள அளவுத் திட்டம் | அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் |
|---|---|---|---|---|
| எழுதுநர் | 02 | 302/14 | 17900-155×10-165×10-21100 | கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர்/ காசாளர்/ கணினிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர்/ காசாளர்/ கணினிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்<br>அல்லது<br>கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பரீட்சையில் சித்தி அல்லது க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06பாடங்களுடனான சித்தி |
| கிராமிய வங்கி எழுதுநர் | 01 | 300/14 | 17900-155×10-165×10-21100 | அ.I) கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் 2வருட அனுபவம் அத்துடன் கணினியை உபயோகித்துப் பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். /<br>கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் 4 வருட அனுபவம் அத்துடன் கணினியை உபயோகித்துப் பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>II) கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத்திட்டத்தில் கணினிப்பக்க உருவாக்குநர் பதவியில் 2வருட அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் கணனிப்பக்க உருவாக்குநர் பதவியில் 4வருட அனுபவம் /<br>ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட 06 பாடசித்தி அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 3 மாதங்களுக்குக் குறையாத MS Office கற்கை நெறி/ அதனை ஒத்த கணினி கற்கை நெறியினைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>(அ) பிரிவு அல்லது (ஆ) பிரிவு தகைமைப்பிரிவில் பணிக்கு இணைக்கப்பட்டவர்கள் தமது தகுதிகாண் காலத்தினுள் மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கிராமிய வங்கியியல் கற்கை நெறியொன்றை வெற்றிகராமாக பூர்த்தி செய்து சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| சாரதி | 01 | 312/14 | 17900-155×10-165×10-21100 | 05ஆம்தர கல்விச்சான்றிதழுடன் பேருந்து/ லொறி/ பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். |
| விற்பனை உதவியாளர் | 02 | 308/16 | 16975-135×10-150×10-19825 | அ. கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்<br>அல்லது<br>ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க .பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி. |
| காசாளர் | 01 | 306/13 | 18360-160×10-170×10-21660 | கூட்டுறவு ஊழியர் 14ஆவது சம்பளத் திட்டப் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத் திட்டப் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்<br>அல்லது<br>கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தரப்பத்திரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 03 திறமை சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தி |
| அலுவலக சேவகர் | 01 | 317/16 | 16975-135×10-150×10-19825 | கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்.<br>அல்லது<br>கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்./ 08 ஆம் தர கல்வி சான்றிதழ் |

- வயதெல்லை 18 தொடக்கம் 45
- கூட்டுறவுச்சங்க பணியாளர்களுக்கு மேற்படி வயதெல்லை ஏற்புடையதல்ல
- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களிற்கமைய சம்பளமும், ஏனைய படிகளும் வழங்கப்படும்.
- மாதிரி விண்ணப்ப படிவத்தினை அலுவலக நேரத்தில் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**முல்லைத்தீவு தெற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம்.**
**செம்மலை,**
**அளம்பில்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதங்கேணியில் இன்று பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 3

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகமும், பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் வடமராட்சி கிழக்குப் பிரதேசப் பண்பாட்டுப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் மருதங்கேணி கலாசார மத்திய நிலையத்தில் மருதங்கேணிப் பிரதேச செயலாளர் குமாரசாமி பிரபாகரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகவும், வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் அலுவலகப் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ், வடமாகாண மோட்டார்ப் போக்குவரத்துத் திணைக்கள ஓய்வுநிலை ஆணையாளர் வல்லிபுரநாதர் பத்மநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், யாழ். மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுணாலினி விஜயரத்தினம், மூத்த கலைஞர்களான கலைச் சாகரம் செல்லையா பரமானந்தம், அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை பிலிப்பையா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ம-66)

# மஹோற்சவம்

சாவகச்சேரி நகர் அருள்மிகு புராதன தான்தோன்றி வாரிவனநாதர் சுவாமி சமேத அமிர்தபாஷினி அம்பாள் உடனுறை சிவன் ஆலய மஹோற்சவப் பெருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நாளை புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

அதேவேளை அஸ்டோத்திரலிங்கங்களுக்கான மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 5 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று கர்மாரம்பமும், 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மறுநாள் சனிக்கிழமை ஆகிய இரு தினங்கள் எண்ணெய்க் காப்பும், 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.26 மணிக்கு கும்பாபிஷேகமும் இடம்பெறவுள்ளன.

(ச-25)


# பெயர் மாற்றம்

ஆறுகால்மடம், பழம் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **விஜயகுமார் விந்துஜன்** ஆகிய நான் எனது பெயரை **விஜயகுமார் யோசுவா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **விஜயகுமார் யோசுவா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS/56089) J-1

**விஜயகுமார் யோசுவா**

# 25ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
07 . 01 . 1977

மறைவு
10 . 09 . 1999

அமரர்

## செல்வன் குணசிங்கம் ஞானேந்திரன்

(குட்டி, கண்ணா - கோபிகா ஆடையக உரிமையாளர்)

கண்ணான கண்ணே கண்ணா - ஞானேந்திரா
உனை பிரிந்து 25 ஆண்டுகள் ஆனதடா
நல்லூரான் மகோற்சவத்தில் உனது நினைவுகள்
எம்மைச் சூழ்ந்து தவிக்கிறதடா
அன்று பூங்காவன தினத்தில் உனது உயிர்
பிரிந்தமையை நினைத்து நினைத்து நெஞ்சம் வலிக்குதடா
எப்போது உனை காண்போம் என்று எமது
கண்கள் ஏங்குதடா
எங்கள் உயிர் உள்ளவரைக்கும் உனது
நினைவில் வாழும் குடும்பத்தினர்.

40/6, புகையிரத வீதி,
கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம்.

உனது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/56067) J-1

# மூன்றாம் ஆண்டு நினைவு

## அமரர் கிட்டிணன் பரஞ்சோதி

(ஆண் தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)

திதி : துவாதசி (30.09.2024)



பிறப்பு 16.02.1943
இறப்பு 03.09.2021

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
மூன்றாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
இக்கிரானை
கந்தரோடை, சுன்னாகம்.

(CS/56090) J-1

# மூன்றாம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம்
03 . 08 . 1928

மறைவு
07 . 09 . 2021

அமரர்

## கோமதிஅம்மா நவரத்தினம்

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை -
மட்டுவில் கமலாசனி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி,
உசன் மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

நாட்களும், வாரங்களும், மாதங்களும் தான் அவை
கடந்திட வருடங்களோ மூன்றாகிவிட்டதே !
ஆனாலும் உம்பிரிவின் துயரமும் உம் நினைவுகளும்
என்றும் எம் மனம் விட்டு நீங்கிவிடாது அம்மா !
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய முருகனை வேண்டுகின்றோம்**

நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

குரு ஒழுங்கை,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(CS/42970) J-1

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை சச்சிதானந்தராசா

(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர்)

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சச்சிதானந்தராசா நேற்றுமுன்தினம் (01.09.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற யோகராணியின் அன்புக் கணவரும், தயானந்தி (ஆனந்தி - ஆசிரியர் யா/மயிலணி சைவ மகாவித்தியாலயம்), பிரசாத் (இலங்கை மின்சார சபை - சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தன் (ஆசிரியர், யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), நிஷாந்தினி ஆகியோரின் மாமனாரும், டர்வின், ஷர்வின், ஜதுசிகா, ஜஸ்விகா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் உடன்பிறவாச் சகோதரனும், விவேகானந்தராசா (UK), சிவானந்தராசா (UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No: 18 கந்தையா வீதி,
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

(CS/56093) J-1

தகவல் :
குடும்பத்தினர்
077 305 3000


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கிள்ளிப்போடும்' அதிகாரங்களுக்கு தமிழ் மக்கள் ஏமாறமாட்டார்கள்!

## விக்கினேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப்.3**

**ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகிய இருவரினதும் தேர்தல் விஞ் ஞாபனங்கள் "கிள்ளிப்போடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்" என்பதையே வெளிப்படுத்துகிறது. நாம் இனிமேலும் அவர்களின் போலி வாக் குறுதிகளுக்கு ஏமாறாது எமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இருப் பினைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஊடாக நாம் ஓங்கி ஒலிக்க வேண்டும்.**

-இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்கினேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்தியறிக்கையில் உள்ளதாவது:-

கடந்த வாரம் வெளியான பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் நாம் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தியிருப்பதன் தேவை மற்றும் அது தொடர்பிலான எமது சரியான முடிவு ஆகியவற்றை எடுத்துக்காட்டுகின்றன.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ ஆகிய இருவருமே தற்போதைய அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படும் என்று குறிப்பிட்டுள் ளார்கள். 13 ஆவது திருத்தச் சட்டம் பொலிஸ், காணி மற்றும் நிதி ஏற் பாடுகளுடன் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று இருவருமே உறுதியளிக்கவில்லை.

பொலிஸ், காணி மற்றும் நிதி அதிகாரங்கள் பிடுங்கப்பட்டு தற்போது அரசமைப்பில் இருக்கும் பல மற்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருக்கும் அதிகாரங்களை ஒத்த அதிகாரப் பகிர்வே அவர்களின் யோசனையாக இருக்கிறது. தமிழ் மக்களுக்கு அர்த்தமுள்ளவகையில் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க நாம் தயாராக இல்லை என்ற செய்தியை அவர்கள் ஏற்கனவே தெளிவாக வெளிப்படுத்திவிட்டார்கள். வடக்கையும் கிழக்கையும் பிரிக்க நடவடிக்கை எடுத்தவர் அநுரகுமார.

அதனால் நாம் இனிமேலும் உங்களின் போலி வாக்குறுதிகளையும் ஏமாற்றுகளையும் நம்பப் போவதில்லை என்ற செய்தியை நாம் சிங்கள அரசியல்வாதிகளுக்கு எடுத்துக் கூறவேண்டும். தமிழ்ப் பொதுவேட்பாளர் ஊடாக நாம் ஓங்கி ஒலிக்க வேண்டும். இது காலம் எமக்கு ஏற்படுத்தியிருக்கின்ற ஒரு சந்தர்ப்பமும் நிர்ப்பந்தமும் ஆகும் - என்றுள்ளது.

(ச)


# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 07 . 1949



மறைவு
02 . 09 . 2024

**அமரர் பொன்னுத்துரை சச்சிதானந்தன்**

நயினாதீவை பிறப்பிடமாகவும் இயக்கச்சியில் வசித்தவரும் புதுவீதி ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும் ஏழாலை கிழக்கு (சாரையடி வைரவர்) ஏழாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சச்சிதானந்தன் நேற்று (02.09.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை-சிவக்கொழுந்து தம்பதியின் அன்பு மகனும் இலட்சுமணப்பிள்ளை-சிவக்கொழுந்து தம்பதியின் பாசமிகு மருமகனும் காலஞ் சென்ற ஜெயகௌரியின் அன்புக் கணவரும் பாலமுகுந்தன் (ஏழாலை). சாந்தரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌசினி. அபிராமி. ஆகியோரின் மாமனாரும் ஈஸ்வரானந்தம். ஆனந்தஈஸ்வரி. கனகாம்பிகை. இரத்தினானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயராமலிங்கம். ஜெகதாம்பிகை. ஜெகசோதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஏழாலை கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குப்பிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**ஏழாலை கிழக்கு,**
**(சாரையடி வைரவர்)**
**ஏழாலை**

(CS 1139) V-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 366 2559**


# நெல் உற்பத்தி வீழ்ச்சி

யாழ்ப்பாணம், செப்.3



கடந்த பெரும்போகப் பருவத்தில் நெல் உற்பத்தி 2.63 மில்லியன் மெற்றிக் தொன்னாகப் பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் 2.4 சதவீதம் வீழ்ச்சியாகும்.

அத்துடன், கடந்த மே மாதத்தில் மீன் உற்பத்தியும் 5.3 சதவீதம் குறைவடைந்துள்ளது. சீரற்ற வானிலை காரணமாக மீன்பிடி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# நீர்த்தேக்கத் திட்டத்துக்காக சீனாவுக்கு மேலதிக பணம்

பஸ்னகொட நீர்த்தேக்கத் திட்டத்துக்காக சீன நிறுவனத்துக்கு பல மில்லியன் ரூபா மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வுக் குழுவில் தெரியவந்துள்ளது. இந்தத் திட்டம் 229.5 மில்லியன் டொலர் செல வில் 2017 ஆம் ஆண்டுக்குள் பூரணப்படுத்தப்படுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது.

திட்டத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2016, 2019 ஆம் ஆண்டுகளில் இரு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் செய்யப்பட்டிருந்தன. திட்டத்தைப் பற்றி ஆராய்வதற்கென அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு 254 மில்லியன் ரூபா பெறுமதியான திட்டத்துக்கு 2.347 மில்லியன் ரூபாவை சிபார்சு செய்தது.

இதனால் 2019 ஆம் ஆண்டு 50.8 மில்லியன் ரூபா மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளது. இதைவிட 2022 ஆம் ஆண்டு பௌதீக செயற்பாடுகளுக்கென 401 மில்லியன் ரூபா 11 தவணைகளில் செலுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் தொழில்நுட்பக் குழுவிடம் கோபா குழு விளக்கம் கோரியுள்ளது.

(சஉ25, 6)


# மரண அறிவித்தல்



**பத்மாவதி இரத்தினசபாபதி**

யாழ். உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட பத்மாவதி இரத்தினசபாபதி அவர்கள் கடந்த (31.08.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சின்னத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், ஸ்ரீரஞ்சன் (ஆளுநர் செயலகம், வடமாகாணம்), ராதிகா (கனடா), ஜீவகௌரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராதிகா (இ.போ.ச வடக்கு பிராந்திய காரியாலையம்), உமாகாந்தன் (கனடா), ஜெகநாத் (கனடா), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அஸ்வின் (யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவன்), கெஷானா (கனடா), அஸ்வினி (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, திருநாவுக்கரசு, திருஞானசம்பந்தர், சரஸ்வதி, சிவபாதசுப்பிரமணியம், ஜெயலட்சுமி தேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான குணநாயகம், சீதாலட்சுமி, சிவலிங்கம் மற்றும் சிவபாதசுந்தரம், இராஜலட்சுமி, அமிர்தலீலா, பத்மாவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (03.09.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
076 713 3229


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சியின் முடிவு தமிழரைப் புறமொதுக்குகிறது

என்.வி.சுப்பிரமணியம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப்.3

தமிழ்ப் பொதுவேட்பாளரை புறந்தள்ளிவிட்டு சஜித் பிரேமதாஸ அவர்களுக்கு நேரடியாக வாக்கினை செலுத்துமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியானது தீர்மானித்தமை ஒரு பாரதூரமான விடயமாகும். அத்துடன் அரசியல் ஞானம் அற்ற - தமிழ் மக்கள் மீது பற்றற்ற நிலையை எடுத்துக்காட்டுகின்றது - இவ்வாறு அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயமானது ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஒரே அணியில் நிற்கின்றோம், ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஒரு இலக்கினை நோக்கி நகர்கின்றோம், ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இனப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வைத் தேடிப் பயணிக்கின்றோம், சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பயணிக்கின்றோம் என்பதை இலங்கை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் பறைசாற்றுவதாக அமையும்.
ஆனால் தமிழரசுக் கட்சியானது ஒட்டுமொத்தமாக நேரடியாக சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவை அளத்திருப்பது ஓர் அரசியல் ஞானம் அற்ற, அல்லது தமிழ் மக்கள் மீது பற்றற்ற நிலையை எடுத்துக்காட்டுகின்றது.
தமிழ் மக்களுக்காக முதலாவது வாக்கை சங்குக்கு போட்டுவிட்டு மற்றைய வாக்கை சஜித் பிரேமதாஸவுக்கு போடுங்கள் எனச் சொல்லி இருக்கலாம்.
ஆனால் தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக ஒதுக்கிவிட்டு, தமிழர்களை அழித்து எமது இனத்திற்கு எதிராகச் செயற்பட்ட, பரம்பரையில் வந்தவருக்கு வாக்கை போடுமாறு கூறுவது தமிழ் மக்களை ஏமாற்றமடைய வைக்கின்ற ஒரு விடயமாகத்தான் கருதவேண்டும்- என்றார். (ச-27)



## சிரசாசன நிலையில் நல்லூரில் தரிசனம்!

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தின் தீர்த்தோற்சவ தினத்தன்று அடியவர் ஒருவர் ஆலயத்தின் பிரதான வாயிலுக்கு முன்பாக தலைகீழாக சிரசாசன நிலையில் நின்று வழிபாட்டை மேற்கொண்டிருந்தார். (ச-100)



## வி.தர்மலிங்கம் நினைவு தினம்

யாழ்., செப்.3

மறைந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் 39 ஆம் ஆண்டு நினைவு தினம் யாழ்ப்பாணம் தாவடியிலுள்ள அவரது நினைவுத் தூபியில் நேற்று திங்கட்கிழமை வலி. தெற்கு பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் அன்னதானம் றிச்சாட் தவப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்றது.
இதன்போது நினைவுத் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நினைவுப் பேருரையாற்றினார்.
நிகழ்வில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-27-20)


# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 06 . 1943



மறைவு 02 . 09 . 2024

## அரியகுட்டி நற்குணம்

(ஓய்வுநிலை தபாலதிபர்)

அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், தியேட்டர் வீதி, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு நிலை தபாலதிபர் அரியகுட்டி நற்குணம் அவர்கள் நேற்று (02.09.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதி (முன்னாள் கட்டடங்கள் திணைக்கள காசாளர்) அவர்களின் அன்புக் கணவரும், இராசகிளி, அமரர் கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்மலிங்கம், பஞ்சலிங்கம், தியாகலிங்கம், மகாலிங்கம், முத்துலிங்கம், சின்னராசா, பிறேமாவதி, ஞானேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், நக்கீரன், தாரினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - பச்சிலைப்பள்ளி), தர்சினி (இலண்டன்), தமிழினி ( அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - நல்லூர்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரசாத் (உரிமையாளர் - பிரசாத் மரக்காலை சுன்னாகம்), சந்திரா (சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்), சிதம்பரகுமார் (இலண்டன்), யோகானந் (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், நிறோசன் (கப்பல் மின்பொறியியலாளர்), கௌசிகா, சுஜேஸ்கா (கணக்காளர் பிரதேசசெயலகம் - பூநகரி), லதிக்கா (தபால் திணைக்களம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பெரியப்பாவும், கேமலதாவின் மாமாவும், மகிழினியன், குழலினி, அருன்சாயித், சஸ்வதன், திபிசனா, நிஸ்வின், தஸ்வந்தி ஆகியோரின் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் தியேட்டர் வீதி, இணுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 937 0057

(CS/56096) J-1



# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 11 . 1957



மறைவு 02 . 09 . 2024

## மார்க்கண்டு றோஸ்மலர் (மல்லிகா)

பாண்டியந்தாழ்வைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும், பாண்டியந்தாழ்வை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு றோஸ்மலர் நேற்று (02.09.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் மாசிலாமணி - திரேசம்மா (பேபி) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அன்ரனி மற்றும் யேசிலி (கனடா), அல்பிறட் (மைனர்), மெற்றலின் (மன்றாணி), காலஞ்சென்ற யேசுதாசன் மற்றும் வேதநாயகம் (பிரான்ஸ்), வசந்தகுமார் (பிரான்ஸ்), கிளேற்றா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.09.2024) செவ்வாய்க்கிழமை பாண்டியந்தாழ்வில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து முற்பகல் 10.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்புத்துறை வீதி,
பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
T.P: 077 615 5084

(CS/56094) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் பெண் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், செப். 3

மோட்டார் சைக்கிளால் விழுந்து படுகாயங்களுக்கு உள்ளான நிலையில், மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த குடும்பப் பெண் சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார்.

செம்பியன்பற்று வடக்கைச் சேர்ந்த மேரிரோசரி ஈஸ்வரபாதம் (வயது-63) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் தேவாலயத்துக்குச் சென்றுவிட்டுத் திரும்பும் போது மோட்டார்சைக்கிளில் இருந்து தவறி விழுந்த அவர், பருத்தித்துறை ஆதாரமருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். அங்கிருந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மீண்டும் மாற்றப்பட்ட நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை மருதங்கேணி பொலிஸார் நெறிப்படுத்தினர்.

(ம-100)

## ரணில்...

டாம் நிலையில் உள்ள தலைவர்கள் செயற்பட்டு வருகின்றனர். அந்த இரண்டாம் நிலைத் தலைவர்கள் இரு தரப்பினரையும் இணைந்து செயற்பட வைப்பதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித்துக்கும்தான் மோதல்கள் இடம்பெறுகின்றனவே அன்றி, இரண்டு தரப்பினரின் இரண்டாம் நிலைத் தலைவர்கள் தமக்குள் நெருக்கமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த நெருக்கம், தேசிய மக்கள் சக்தியின் வெற்றியைத் தடுப்பதற்காகவே உள்ளது. நாம் பிரிந்திருப்பது விவேகமானதா இல்லையா? நாம் ஒன்று கூடி தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை மாற்றியமைக்க ஏதாவது செய்ய முடியாதா? என அவர்கள் பேசிக்கொள்கின்றார்கள் என்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் 50 வீதமான வாக்குகள் கிடைக்காது என்று பல்வேறுபட்ட கருத்துக்கணிப்புகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. ஆதலால், ரணில் மற்றும் சஜித் இருவரையும் இணைத்து தேர்தலை எதிர்கொள்ள வைப்பதற்குப் பல்வேறுபட்ட பேச்சுகள் இடம்பெற்றுள்ளன என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ-ம-சி)

## பொறுப்புக்கூற...

செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பான முதற்கட்ட அறிக்கை (கூட்ட முன்னாயத்த அறிக்கை) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையிலேயே, ஸ்ரீலங்கா அரசாங்கத்தை பொறுப்புக்கூறச் செய்வதற்கு உறுப்பு நாடுகள் தம்மாலான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

பரந்த அளவிலான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவும், சர்வதேச சட்டத்துக்கு இணங்கவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் தனிநபர்களுக்கு எதிரான சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடைகள் போன்ற மேலும் பல்வேறுபட்ட தடைகளை ஆராயுமாறும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை - ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் நடவடிக்கைகள் மற்றும் நகர்வுகளால் தான் அச்சமடைந்துள்ளதாகவும், இறுதியாக நிறைவேற்றப்பட்ட ஜெனீவா தீர்மானம் தொடர் ... ஜனாதிபதி வேட்பாளர்களின் நிலைப்பாடு என்ன? என்றும் ஓய்வுபெற்ற ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி ஜெகத் டயஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜெகத் டயஸ் இறுதி யுத்தத்தின் போது கிளிநொச்சி கட்டளைத் தளபதியாகப் பணியாற்றி 2015ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ம-6)

## தந்தை...

உறுப்பினருமான மூத்த சட்டத்தரணி ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழரசுக் கட்சியைக் கட்டி வளர்த்த தந்தைசெல்வாவடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டித் தீர்வை வலியுறுத்தி வந்த நிலையில் அவரின் சித்தாந்தத்தைப் புரட்டிப்போடும் வகையில் தமிழரசுக் கட்சியின் ஒரு பகுதியினர் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர்.

தமிழரசுக் கட்சிக்குள் பிளவு இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி அனேகமான உறுப்பினர்கள் கூட்டத்துக்குச் செல்லாத நிலையில் சுமந்திரன் அணியினர் சஜித்துக்கு ஆதரவான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர்.

சுமந்திரன் வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வை முன்வைக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கே ஆதரவு வழங்கப் போவதாகக் கூறி வந்த நிலையில் தற்போது ஒற்றை ஆட்சியை வலியுறுத்தும் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

தமிழரசுக் கட்சியில் தேசியம் சாராதவர்கள் சிலர் உள்ள நிலையில் அந்தக் கட்சிக்குள் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே விரைவில் தமிழரசுக் கட்சியில், தமிழ்த் தேசியம் சாராதவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என நம்புகிறேன் அல்லது மக்கள் உரிய நேரத்தில் அவர்களை வெளியேற்றுவார்கள்" - என்றார்.

(அ-ஓ-20-125)

## ஸ்ரீகணேசன்...

சனிக்கிழமை ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் கடந்த 30 ஆம் திகதி, சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த ஆங்கில மொழி கற்பித்தல் துறையைச் சேர்ந்த மூத்த விரிவுரையாளர் கலாநிதி கே. ஸ்ரீகணேசனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் அன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், ஆங்கில மொழி கற்பித்தல் துறையைச் சேர்ந்த அவர் ஆங்கில மொழி கற்பித்தலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

(அ-ஓ-இ)

## ஜனாதிபதித்...

செல்வாக்குச் செலுத்தும். தபால்மூல வாக்களிப்பு நாளை ஆரம்பமாகும் நிலையில் அரச பணியாளர்கள் அதனை - ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாங்கள் இனவழிப்பை எதிர்கொண்ட சமூகம். 50 ஆயிரம் மாவீரர்களும், 4 இலட்சம் மக்களும் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்திருக்கின்றனர். பல ஆயிரக் கணக்கானோர் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். அரச ஒட்டுக்குழுக்களான ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட் ஆகியனவற்றால் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றனர்.

இழப்புகளைச் சந்தித்த நாம், எமது வடக்கு - கிழக்கு தாயகம் அங்கீகரிக்கப்பட்ட தீர்வையே கோருகின்றோம். அரச உத்தியோகத்தர்கள் எடுக்கின்ற முடிவு மக்களது முடிவில் பாதிப்பை ஏற்படுத்தும். உங்களது கடமை நேரத்துக்குப் பின்னர் தேர்தல் புறக்கணிப்பு குறித்து தீவிரமாக பரப்புரையை முன்னெடுங்கள்" - என்றார்.

(அ-ஓ-125)

## சமஷ்டித்...

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், உங்கள் தேர்தல் அறிக்கையில் சமஷ்டித் தீர்வு திட்டம் உள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலாகவே, சமஷ்டி தொடர்பில் எதையும் உள்ளடக்கவில்லை என்று சஜித் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எமது கட்சி, எமது தேர்தல் அறிக்கையை வேறு எந்த வேட்பாளரும் அச்சடிக்காத வகையில் மூன்று மொழியிலும் அச்சடித்து வெளியிட்டுள்ளோம். இந்தநிலையில் எமது கட்சியின் மத்திய குழுத் தலைமை எடுத்த முடிவுக்கு அமைவாக எமது தேர்தல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயத்துக்கு மேலாக ஒரு விடயம் அதிகரிக்கப்படவோ அல்லது குறைக்கப்படவோ மாட்டாது" - என்றார்.

(அ-ஓ-125)

## பாம்பு...

பகுதியிலேயே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த 28 ஆம் திகதி கொழும்புக்குச் சென்ற அவருடைய சகோதரன் கடந்த முதலாம் திகதி திரும்பிவந்து பார்த்தபோது அவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின்போது, சடலத்தில் பாம்பு கடித்த அடையாளம் காணப்பட்டுள்ளது. இதையடுத்து வீட்டைச் சோதனையிட்டபோது, அவரைக் கடித்ததாகக் கருதப்படும் புடையன் வகைப் பாம்பு அடையாளம் காணப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டுள்ளது.

இளைஞரின் இறப்புத் தொடர்பான விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டனர்.

(அ-ம-26)

## அஞ்சல்...

பொலிஸார், மாவட்டச் செயலகம் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் கடமையாற்றுபவர்களுக்கான வாக்குப் பதிவுகள் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து ஏனைய அரச பணியாளர்களுக்கான தபால்மூல வாக்குப் பதிவுகள் நாளைமறுதினமும் எதிர்வரும் 6 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

(அ-ம-66)

## சஜித்தை...

தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மாவை சேனாதிராசா இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக் கட்சி, சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக மத்திய குழுவில் தீர்மானம் நிறைவேற்றியதாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்திருந்த கட்சித் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா, இந்த முடிவு தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் தன்னுடன் பேசப்படவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய தினம் அவர் தெரிவித்ததாவது:-

"எமது எதிர்காலத்தை கருத்திற்கொண்டு குறிப்பாக எமது இனத்தின் விடுதலைக்கான வாக்களிப்பாக கருதிக்கொண்டு தமிழர் தாயகத்தில் உள்ள எமது மக்கள் அனைவரும் ஒற்றுமையாக செப்ரெம்பர் 21 ஆம் திகதி வாக்களிக்கவேண்டும். எமது இனத்தின் விடுதலை மிகவும் முக்கியமானது. அதனைச் சிந்தித்து அனைத்து தமிழ் மக்களும் வாக்களிக்கவேண்டும் - என்றார்.

தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிடும் பா.அரியநேந்திரன் அதில் இருந்து விலகவேண்டும் என்ற தமிழரசு தீர்மானம் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது, உடல்நலக் குறைவு காரணமாக மத்திய செயற்குழுக் கூட்டத்துக்குச் செல்லவில்லை. இந்த வாரத்துக்குள் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து எவ்வாறு நடைமுறைப் படுத்துவது என முடிவெடுப்போம் - என்றார்.

(அ-ஓ-27-100)

## புலமைப்பரிசில்...

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் மு.ப. 10.45 மணி வரையில் முதலாம் பகுதி வினாத்தாளுக்கான பரீட்சையும், முற்பகல் 11.15 மணிமுதல் 12.15 மணிவரை இரண்டாவது பகுதி வினாத்தாளுக்கான பரீட்சையும் நடைபெறவுள்ளன.

(அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 13ஆவது திருத்தத்துக்கு அமைய

# ஒரே நாட்டுக்குள் அதிகாரப்பகிர்வு!

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



கிளிநொச்சி, செப். 3

எமது ஆட்சியில், ஒரே நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படும். அத்துடன், 13ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடுகளை முன்னெடுப்பதோடு, மாகாண சபைகளுக்கு காணப்படுகின்ற அதிகாரங்களை மத்திய அரசாங்கம் பறித்துக்கொள்கின்ற செயற்பாட்டுக்கு இடமளிக்கமாட்டோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மற்றும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலர் மு.சந்திரகுமார் ஆகியோர் இடையே நேற்றுத் திங்கட்கிழமை சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்துக்கு தனியான ஜனாதிபதி செயலணி ஒன்றும் நிறுவப்படும். ஏனைய பிரதேசங்களுக்கும் மாகாண அடிப்படையில் செயலணிகள் அமைக்கப்படும். இந்த செயற்றிட்டத்தின் ஊடாக யாழ். தேர்தல் மாவட்டத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களுக்கு இரண்டு உப செயலணிகளும் அமைக்கப்பட்டு, மாதாந்த வடக்கின் அபிவிருத்தி தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

பெண்களைத் தலைமையாகக் கொண்ட அதிக குடும்பங்கள் காணப்படுவதோடு, அவர்கள் நுண் நிதிக் கடன் பொறிக்குள் சிக்கியிருக்கின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இதுவரை எந்தத் தீர்வும் இல்லை. போரால் பாதிக்கப்பட்ட அதிகமான குடும்பங்கள் காணப்படுகின்றன. நானும் போரால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்ப உறுப்பினர் என்ற அடிப்படையில், போருக்குப் பின்னரான இந்தப் பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்துவேன். இளைஞர், யுவதிகளின் பிரச்சினைகள் உட்பட வேலையில்லாப் பிரச்சினைக்கும் தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்.

மேலும் நன்னீர் மீன்பிடி, கரைவலை மீன்பிடி உட்பட பல கைத்தொழில் வாய்ப்புகளின் ஊடாக அபிவிருத்தியை நோக்கிச் செல்லமுடியும். இதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதோடு, இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களாக மாற்ற நடவடிக்கை எடுப்பேன் - என்றார். (அ-ஒ-இ)



மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவான் போபகேயை ஆதரித்து வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பரப்புரைக் கூட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது முன்னிலை சோசலிசகட்சியின் முக்கியஸ்தர் குமார் குணரட்ணம், புதிய ஜனநாயக மாக்ஸிசலெனினிச கட்சியின் செயலாளர் சி.கா.செந்திவேல், மக்கள்போராட்ட முன்னணி உறுப்பினர் லகிருவீரசேகர உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-25,110)

# பங்களாதேஷில் அதிகரிக்கும் இந்துக்களுக்கெதிரான வன்முறை

பங்களாதேஷ் , செப்.3

பங்களாதேஷில் ஷேக் ஹசீனாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதன் பின்னர் இந்துக்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வரும் நிலையில் அங்கு பணிபுரியும் 49 ஆசிரியர்களை பதவி விலகுமாறு மாணவர்கள் பலவந்தப்படுத்தியுள்ளனர்.

சில பாடசாலைகள் மீதும் , ஆசிரியர்கள் மீதும் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 52 மாவட்டங்களில் சிறுபான்மையினருக்கு எதிரான 205 வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாக டெய்லி மெயில் செய்தி வெளியிட்டுள்ளது.

சிறுபான்மையினரையும் சூபி முஸ்லிம்களையும் பாதுகாக்க எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என நோபல் பரிசு பெற்ற புலம்பெயர்ந்த பங்களாதேஷ் எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரீன் கண்டித்துள்ளார். இதேவேளை முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை திருப்பி அனுப்புமாறு தற்போதைய அரசாங்கம் விடுத்த கோரிக்கையை இந்திய அரசு நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25-6)

# பெற்றோல் விலையை 150 ரூபாவால் குறைப்பேன்



## ஜனக ரத்நாயக்க உறுதி

கொழும்பு, செப்.3

நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் பெற்றோல் விலையை 150 ரூபாவால் குறைப்பேன் என ஜனாதிபதி வேட்பாளரும் பொதுச்சேவை ஆணைக் குழுவின் முன்னாள் தலைவருமான ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் படி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் 36 பில்லியன் ரூபா ஊழல் மோசடி இடம்பெற்றது. இதில் பல உயரதிகாரிகள் சம்பந்தப்பட்டுள்ளனர். நான் 2022 ஆம் ஆண்டு பெற்றோல் விலையை 200 ரூபாவாக குறைக்கலாம் எனத் தெரிவித்திருந்தேன். தவறான முறையில் இடம்பெற்ற எரிபொருள் கொள்வனவே பெற்றோல் விலை அதிகரிப்புக்கு காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25-6)

**வாடகைக்கு**

வைமன் வீதி, நல்லூரில் மூன்று அறைகள் வாடகைக்கு உண்டு. பல்கலைக்கழக மாணவிகள், அலுவலகம் செல்லும் பெண்களுக்கு மட்டும்

(CS/1260) J-1

**076 787 0837**

**காணி விற்பனைக்குண்டு**

உரும்பிராய் சந்தியில் இருந்து 600m தொலைவில் நல்ல அயற்சூழல் கொண்ட காணி துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

**முதல் பதிவு செய்யப்படும் ஐந்து துண்டுகளுக்கு இலவசமாக குழாய் கிணறும் அடித்து தரப்படும்.**

தொடர்புகளுக்கு:

**077 132 9682**

**காணி விற்பனைக்குண்டு**

நீர்வேலி அரசடி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 11 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

**1 பரப்பின் விலை - 18 இலட்சம் ரூபா**

தொடர்புகளுக்கு:

**077 400 7747**

# சஜித்துக்கு ஆதரவு காரணம் என்ன?

## தமிழரசுக் கட்சி மாவட்டக் கிளை கேள்வி

யாழ்ப்பாணம், செப்.3

விகாரைகள் அமைக்க அதிக நிதி ஒதுக்கிய சஜித்துக்கு ஆதரவளித்த தன் காரணத்தை சுமந்திரன் வெளிப்படுத்தவேண்டும் என பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் மாவட்டக் கிளை உறுப்பினருமான சண்முகம் ஜீவராஜ் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தலைவர், புதிதாக தெரிவான தலைவர் உள்ளிட்ட பலர் இல்லாது கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்ட தமிழரசுக் கட்சிக் கிளைகள் பொதுவேட்பாளரை ஆதரிப்பது என தீர்மானித்துள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-113)

# பரிசளிப்பும் ஆண்டு விழாவும்

யாழ்ப்பாணம், செப்.3

நல்லூர் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடலின் பரிசளிப்பும் ஆண்டு விழாவும் கலைக்கூடலின் இணைத்தலைவர் இ.இளங்கோவன் தலைமையில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.